# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
வைகாசி 3
ஜமா. ஆகி. 9
புதன் (17-5-1978)
நிறுவியது 1947
புத்தகம் 81
இதழ் 98
யாழ்: தொ.பே. இல. 352
விலை சதம் 35


# "தலைகீழாகத் தொங்கவிட்டு தலையின்கீழே 'தீ' வைத்தனர்"

## தமிழ் இளைஞர் பொலிசாரால் சித்திரவதை!

## 'அம்னெஸ்டி இன்டர் நாசன'லுக்கு முறையீடு!

**அண்மையில் வடபகுதியில் இடம்பெற்ற சி.ஐ.டி. பொலிசாரின் கொலைச்சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும் தமிழ் இளைஞர்கள், 24 மணித்தியாலங்களுக்கு அதிகமாக சட்டவிரோதமாக பொலிசாரினால் தடுத்துவைக்கப்பட்டு, மிலேச்சத்தனமான முறையில் குரூரமான சித்திரவதைகளுக்குள்ளாக்கப்படுவதாக கிடைத்துள்ள புகார்களை அடுத்து, இது விஷயத்தை சர்வதேச மன்னிப்புச்சபையின் (AMNESTY INTERNATIONAL) கவனத்துக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.**

முருங்கனில் சி. ஐ. டி. அதிகாரிகளான திரு. பஸ்தியாம்பிள்ளை, பேரம்பலம், பாலசிங்கம், பொலிஸ் டிரைவர் சிறிவர்த்தன ஆகியோரும் திருநெல்வேலியில் திரு. பத்மநாதனும், இனந்தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே. பத்திரிகைகளுக்கு கிடைத்த ஒரு கடிதத்தின்படி முருங்கன் கொலைகளுக்கும் ஏனைய சில பழைய கொலைகளுக்கும் தாமே பொறுப்பு என்று "தமிழ்ஈழ விடுதலைப்புலிகள்" என்ற பெயர் கொண்ட இயக்கம் ஒன்று உரிமை பாராட்டியிருந்தது.

இதைத்தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளை தேடும் வேட்டையில் பொலிஸ் அதிகாரிகள் மும்முரமாக இறங்கியுள்ளனர். இதற்காக தென்னிலங்கையிலிருந்து 500 விசேட பொலிசார் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். பொலிஸ் அதிரடிப்படைகள், இராணுவம், விமானப்படை, ஆமெட் கார்கள். அனைத்தும் வடக்கே குவிக்கப்பட்டுள்ளன.

தமிழ் இளைஞர்கள் திடீர் திடீரென சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இப்படி அழைத்துச்செல்லப்படும் இளைஞர்களை 24 மணி நேரத்துக்குள் விடுதலை செய்யாமலும், அதேசமயம் நீதிமன்றத்தில் பாரப்படுத்தாமலும், பொலிசார் தம் இச்சைப்படி பல நாட்களுக்கு தடுத்துவைத்திருந்து மிகவும் குரூரமான முறையில் சித்திரவதை செய்வதாக பல புகார்கள் கிடைத்துள்ளன.

முன்புபோல பொலிசார் இப்போது 4வது மாடிக்கு அழைத்துச்சென்று சித்திரவதை செய்வதில்லை யென்றும், இப்போது வேறு இடங்களில் வைத்து பொலிசார் இம்சைப்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் முக்கிய உறுப்பினரான திரு. ஆ. ரகுபதிபாலசிறீதரன் வத்தளையிலுள்ள வீடொன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து தாக்கப்பட்டுள்ளார்.

மட்டு நகரில் வைத்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட சுரேஷ்குமார் என்ற இளைஞர், தாம் பொலிஸ் ஜீப்பிலும், முருங்கன் வீதியிலும் மன்னார் மடு மதா கோவிலுக்கு முன்னாலுள்ள சி.ஐ.டி. காரியாலயத்திலும் வைத்துகுரூரமாகவும் மிலேச்சத்தனமாகவும் தாக்கப் பட்டதாகவும், தம்மை விசாரணைக்காக அழைத்துச் சென்று பொலீசார் ஆறுநாட்கள் கழித்தே தம்மை விடுதலை செய்ததாகவும் கூட்டணி செயலதிபர் திரு. மு. சிவசிதம்பரத்திடம் புகார் செய்துள்ளார்.

பாரிசுக்கு புறப்படவிருந்த பரமானந்தன் என்ற தமிழ் இளைஞர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பொலிசாரால் கைதுசெய்யப்பட்டபின்னர், பல நாட்கள் அவர் எங்கிருக்கிறார் என்பதே தெரியாமலிருந்தது. பரமானந்தன் கோரமாக சித்திரவதைகளுக் குட்படுத்தப் பட்டார் என்றும், அவரைத் தலை கீழாக தொங்கவிட்டு அவர் தலைக்குக் கீழே தீவைத்தனர் என்றும் இதன் விளைவாக அவரது தலைமயிர் எரிந்து விட்டது என்றும் பரமானந்தனின் சகோதரர் பொலீஸ் அதிபரிடம் புகார் செய்திருக்கிறார்.

இப்போது திரு. பரமானந்தன் மன்னார் நீதிமன்றத்தில் நிகழ்ந்த அடையாள அணி வகுப்பில் அடையாளம்காட்டப்படவில்லை; ஆயினும் தொடர்ந்து விளக்கமறியலில் அவர் வைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படும் தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் மனிதாபிமானமற்ற முறை

—4-ம் பக்கம் பார்க்க

# நீதிபதிகளின் அதிகாரத்தை குறைக்கும்சட்டம் வருகிறது

சந்தேக நபர்களுக்கு பிணைவழங்குவதற்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும், மாவட்ட நீதிபதிகளுக்கும், மாஜிஸ்ரேட்டுகளுக்கும் இப்போது இருந்துவரும் சுயேச்சையான அதிகாரத்தை பறிக்கும் விசேட சட்டமூலமொன்று தேசியஅரசுப் பேரவையில் இந்த வாரம் தாக்கல் செய்யப்படவிருக்கிறதாகத் தெரியவருகிறது இச் சட்டமூலத்தின்படி, சில குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் நிறுத்தப்படும் சந்தேக நபர்களுக்குபிணை வழங்குவதற்கு நீதிபதிகளுக்கு அதிகாரம் இல்லாமற் செய்யப்படும்,

அரசாங்கத்துக்கு விரோதமாக வெறுப்பை தூண்டிவிடுதல்—மத, இன வெறுப்பை வளர்த்தல்—கொலை, களவு, குண்டுவீச்சு, கடத்தல், வன்முறை—போன்ற சம்பவங்களில் சந்தேக நபர்களாக காணப்படுபவர்களுக்குபிணை கொடுப்பதற்கு மேல் நீதிமன்றத்துக்கோ, மாவட்ட நீதிமன்றத்துக்கோ, மாஜிஸ்ரேட்டுக்கோ இப்போதிருக்கும் அதிகாரத்தை இல்லாமற் செய்வதே புதிய சட்டமூலத்தின் நோக்கமாம்.

உயர் நீதிமன்றம் ஒன்றுக்கே பிணைகொடுக்கும் அதிகாரம் உண்டு என்றாலும், சில தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் மட்டுமே அந்த அதிகாரத்தை உயர்நீதிமன்றமும் பயன்படுத்தமுடியும் என்று புதிய சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படவிருக்கிறது.

# யாழ்ப்பாணத்தில் பினான்சியல் டைம்ஸ் நிருபர்கள்!

உலகப் பிரசித்திபெற்ற சஞ்சிகையான லண்டன் 'பினான்கியல் டைம்ஸ்" இலங்கையைப் பற்றி எட்டுபக்கங்களில் விசேட அனுபந்தம் ஒன்றை இம்மாதம் 31ம் திகதி வெளியிடவிருக்கிறதல்லவா? அதையொட்டி தமிழ் மக்களின் அரசியல் நிலைமைகளை நேரடியாக அறிந்து எழுதுவதற்காக மேற்படி சஞ்சிகையின் இரண்டு நிருபர்கள் லண்டனிலிருந்து சென்ற சனிக்கிழமை (13.5.78) யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள். அவர்கள், யாழ் பா, உ. திரு. வெ. யோகேஸ்வரன், காப்பாய் பா.உ. திரு சி. கதிரவேற்பிள்ளை, சுதந்திரன் ஆசிரியர் திரு கோவை மகேசன் ஆகியோரையும் தமிழ் இளைஞர் பேரவைப் பிரமுகர்களையும் சந்தித்து இங்குள்ள நிலைமைகளை கேட்டறிந்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களையும் கொழும்பில் சந்தித்து உரையாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உலகத் தமிழர்களின் ஒருமைப்பாட்டுக்கு ஊறுதேடக்கூடிய கோஷத்தை நாம் முன்வைக்கக்கூடாது!"

## யாழ்வளாக கருத்தரங்கில் சுதந்திரன் ஆசிரியர் பேச்சு!

"உலகடங்கிலுமுள்ள தமிழர்களின் ஆதரவை நாம் நாடி நிற்கிறோம். உலகத் தமிழர்களிடையே நேச உறவையும், ஒருமைப்பாட்டையும் நெருக்கமான இணைப்பையும் கட்டி வளர்க்க முயற்சிக்கிறோம். தமிழ் ஈழத்தின் விடுதலைப்போராட்டத்துக்கு ஆதரவாக உலகத் தமிழர்கள் — குறிப்பாக தமிழ் நாட்டின் நாலரைக் கோடி தமிழர்கள்—தங்கள் ஆதரவைத் தந்துகொண்டிருக்கிறார்கள். இந்நிலையில், இந்தத் தமிழின உறவுக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஊறுதேடக்கூடிய எந்தக் கோஷத்தையும் நாம் இங்கு எழுப்பக்கூடாது!"

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக வளாக தமிழ் மன்றத்தினர் எடுத்த தமிழ் விழாவில் "இந்திய தமிழ் சஞ்சிகைகளின் கட்டுப்பாடற்ற இறக்குமதியும் ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சியும்" என்னும் தலைப்பில் உரையாற்றிய சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் குறிப்பிட்டார். கலாநிதி ஆ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. கோவை மகேசன் மேலும் கூறியதாவது!

"நாம் இன்று விடுதலைப் போராட்டத்திலீடு பட்டிருக்கிறோம். நமது தேசத்தை நமது சுதந்திரத்தை காணப் போராடுகிறோம். இந்தப் போராட்டத்துக்கு உலகத்தின் ஏழரைக்கோடி தமிழர்களின் ஆதரவை நாடி நிற்கிறோம். நமது விடுதலைப் போராட்டத்துக்கு உலகத் தமிழர்களிடையே ஆதரவு திரண்டு வருகிறது. 'உலகத் தமிழனே ஒன்றுபடு—ஈழத் தமிழனுக்காக குரல் கொடு' என்ற மூழக்கம் எங்கும் எழுந்துள்ளது. கட்சிவேறுபாடுகள், அரசியல் வேறுபாடுகளின்றி இந்தியத் தமிழ் நாட்டின் நாலரைக் கோடி தமிழர்களும் நமக்காக ஆதரவுக்குரல் கொடுத்து வருகிறார்கள். கடந்த ஆகஸ்ட்டில் நாம் இங்கு சிங்கள வெறியர்களால் தாக்கப்பட்டபோது, திமுக தலைவர் கலைஞர் கருணாநிதி முன்னின்று சென்னையில் நடத்திய மாபெரும் ஹர்த்தாலில், கட்சி பேதமின்றி தமிழக மக்கள் அனைவரும் பங்கு பற்றியதும், சென்னையில் வரலாறே காணாத அளவுக்கு அந்த கடையடைப்பும், கண்டன ஊர்வலமும் வெற்றி பெற்றதும் நாம் அறிந்தவைகளே. எனவே இத்தகைய இன உணர்வுக்கும், ஒருமைப்பாட்டுக்கும் எந்த வகையிலும் ஊறுதேடக்கூடிய எந்த கோஷத்தையும் நாம் முன் வைக்கக்கூடாது.

### தமிழ் இலக்கியம் ஒன்றே

தமிழன் எங்கிருந்தாலும் அவனைத் தமிழனாகவே நான் காணுகிறேன். அதே போல தமிழர்களுடைய இலக்கியங்கள் எங்கு எழுந்தாலும், அவற்றைத் தமிழ் இலக்கியமாகவே நான் காணுகிறேன. தமிழ் இலக்கியம் என்பது அன்று முதல் இன்றுவரை ஒன்றுதான். ஈழத் தமிழ் இலக்கியம், இந்திய தமிழ் இலக்கியம், என்று தமிழ் இலக்கியம் வேறுபடத்தொடங்கியது, இலங்கையென்றும், இந்தியா என்றும் இரண்டு செயற்கை நாடுகள், செயற்கை எல்லைக் கோடுகள் உருவாக்கப்பட்டபின்னர்தான்.

திருக்குறளையும் அகநானூற்றையும், புறநானூற்றையும், சிலம்பையும், சீவக சிந்தாமணியையும், கலித்துறையையும், கலிங்கத்துப் பரணியையும் நாம் இந்திய தமிழ் இலக்கியங்கள் என்றா கருதுகிறோம். நமது தமிழ் இலக்கியங்கள் என்றுதானே ஏற்றுக் கொள்ளுகிறோம்?

தமிழன் தனது நாட்டைத் தானே ஆண்டுகொண்டிருந்த போது — தமிழனுக்கென்று ஓர் ஆட்சி சீரும் சிறப்புமாக நிலைபெற்று இருந்தபோது— நல்ல தமிழ் இலக்கியங்கள் பிறந்தன. அவையே இன்று நிலைத்து வாழுகின்றன. உலகத் தமிழர்கள் தமது இன்றைய எல்லைக்கோடுகளைத் தாண்டி, ஒரே தமிழ் பேரரசின் கீழ் வாழுகின்ற காலம் மீண்டும் ஒரு நாள் மலரும் என்கிற நம்பிக்கை எனக்குண்டு; அக்காலம் வரும் போது தமிழ் இலக்கியம் மீண்டும் செழித்து வளரும்.

### வளர்ச்சிக்கு ஏன்தடை?

இங்கு தமிழ் இலக்கிய சஞ்சிகைகள் வளர முடியவில்லை யென்றால்—அதற்கு ஒரு காரணம் சிங்கள அரசாங்கம் நமது இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு வழங்க மறுப்பது தான்... இந்திய தமிழ் சஞ்சிகைகளை தடை செய்வதில் சிங்கள அரசுக்கு இருந்து வந்துள்ள ஆர்வம், இங்கு புதிய தமிழ் சஞ்சிகைகள் தோன்றுவதற்கு உதவிபுரிய வேண்டுமென்பதில் காணப்படவில்லை. தமிழகத்துக்கும் நமக்கும் உள்ள தொடர்பை எப்படியும் துண்டித்து விட வேண்டுமென்பது தான் சிங்கள வெறியர்களின் ஆசை... இந்த ஆசைக்கு நாமே தீனி போடலாமா?

நான் எனது வாசகர்களின் மீது அழுத்தமான நம்பிக்கை வைத்திருப்பவன். அவர்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் எந்த முயற்சியையும் ஏற்றுக்கொள்ளாதவன். நல்லதை ஆதரிக்கவும், கெட்டதை விலக்கவும் நமது வாசகர்களுக்கு தெரியும். சாதாரண பொருட்களை வாங்கும் போதே பல தடவை ஆராய்ந்து பார்த்துவாங்கும் நமது மக்கள், இலக்கிய துறையில் நல்லவற்றை ஆதரிக்கவும், அல்லவற்றை நிராகரிக்கவும் தெரிந்திருக்க மாட்டார்களா? இந்தியாவிலிருந்து இப்போது இறக்குமதியாகும் குப்பைகூழங்கள் தானாகவே நமது இலக்கியச் சந்தையிலிருந்து விரைவில் ஒதுக்கப்பட்டு விடும். நல்ல, தரமானவை மட்டுமே கால ஓட்டத்தில் நின்று நிலைக்கும். அந்த அளவுக்கு எனக்கு நம்பிக்கை உண்டு. இப்போதே பத்திரிகை கடைகளில் ஏராளமான இந்திய தமிழ் சஞ்சிகைகளில் தேங்கத் தொடங்கியுள்ளன; வண்ணப் படங்களால், வாசகர்களை நீண்ட காலத்துக்கு ஏமாற்ற முடியாது.

இந்திய தமிழ் சஞ்சிகைகளை தடை செய்ய வேண்டுமென்ற சோஷத்தை முன் வைக்காது, ஈழத்தில் மட்டுமன்றி, தமிழ் கூறும் நல்லுலகிலிருந்து ஆபாசக் குப்பைகளை ஒழிக்கும் ஓர் இயக்கத்தை பரவலான அடிப்படையில் முன் வைப்போம் இலங்கையில் மட்டுமன்றி, இந்தியத் தமிழ் நாட்டிலும், இலண்டன், மலேசியா, சிங்கப்பூர் போன்ற தமிழர் வாழும் இடமெங்கும் இலக்கிய சீரழிவுக்கு எதிரான இயக்கத்தை நடத்துவோம். இந்தியப் பத்திரிகைகளை தடைசெய்யவேண்டுமென்ற ஆபத்தான கோஷத்தை எழுப்பாது எங்கள் பத்திரிகைகளை அங்கு ஏற்றுமதி செய்வதற்கு வழி காண்போம்"

திரு. சொக்கன் பேசுகையில், பல்வேறு ரசனையுள்ள வாசகர்களையும் திருப்திப் படுத்துகிற முறையில், சரியான பத்திரிகைக்கலை அனுபவந்தான் ஈழத்தில் தமிழ் சஞ்சிகைகள் வெளியிடப் பட்டால், அவை நின்று நிலைக்கும் என்று குறிப்பிட்டார். செங்கை ஆழியானும் உரையாற்றினார்.

# படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவிலா?

## வேலைவாய்ப்பு படிவம் வழங்குவதில் நீதியமைச்சர் தொகுதியில் பாரபட்சம்!

தார்மீகம், சோசலிசம், சமதர்மம் என்றெல்லாம் புலம்புகின்ற தற்போதைய ஆட்சியாளர்களின் அமைச்சரவையில்; நீதி தேவனாக அங்கம் வகிக்கும் கல்குடா தொகுதி தேசிய பேரவை உறுப்பினரும் நீதிஅமைச்சருமான திரு. தேவநாயகம் அவர்கள் அண்மையில் வாழைச்சேனை கறுவாக்கேணிகிராமத்திற்கு தொழில் வாய்ப்பு பத்திரங்களைவேலையற்றோருக்கு வழங்குகையில், "இந்தப் பத்திரங்களை முதலில் நமக்கு வாக்கு அளித்தவர்கட்கும், ஒத்துழைப்பு தந்தவர்கட்கும் கொடுங்கள், மற்றவர்களை பிறகு யோசிப்போம்" என்று பேசியிருக்கிறார்—

ஜனாதிபதியின் பாரபட்சமற்ற ஜனநாயகப் போக்கில் நம்பிக்கை வைத்து, அமைச்சர்களின் அலங்காரப் பேச்சில் மதி மயங்கி, கல்வித் தகைமைகளுடன் காத்திருந்த தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் பெரும் ஏமாற்றமடைந்தனர்.

தகைமைகள் சிறிது மற்றவர்கட்கே பத்திரங்கள் வழங்கப்பட்டன வென்றும் அதுவும் கல்குடா தொகுதியில் வசிக்காத பலரும் கறுவாக்கேணி ஐக்கிய தேசிய கட்சிக் கிளைத்தலைவரின் தனிப்பட்ட செல்வாக்கின் மூலம் பத்திரங்களைப் பெற்றதாகவும் மக்கள் பேசிக்கொள்ளுகின்றனர்.

அப்படியாயின் இவர்கள் நாளெல்லாம் நாக்கு வலிக்க கத்துகின்ற 'தார்மீகம்' தரைமட்டமாகிவிட்டதா? ஜனநாயகம் ஜன நடமாட்டமில்லாத சுடுகாட்டில் பலியிடப் பட்டுவிட்டதா? சமநீதி வழங்குவேன் என சத்தமிடும் நீதி அமைச்சரின்வாய் மொழி அழிந்துவிட்டதா? எல்லோரும் இலங்கைமாதாவின் பிள்ளைகள் பாகுபாடுகள் மறையட்டும், திறமையுள்ளவர்கள், வறுமைக் குடும்பங்களுக்கே வேலைவாய்ப்பு என்று பீற்றித்திரிவரெல்லாம் வெறும் நடிப்பா?

கறுவாக்கேணி ஐக்கிய தேசியக் கட்சிக்கிளை, அப்படி தமிழ் இளைஞர்களிலும், யுவதிகளிலும் அரசியல் பழி தீர்ப்பதாயின், திறமையுள்ளவர்கட்கு முதலிடம் கொடுக்க மறுப்பதாயின், இதை நீதி அமைச்சரும் வரவேற்பதாயின்... ஏ... ஜனநாயகமே! மானங்கெட்ட தார்மீகமே! மதிப்பற்ற நீதியே! சூடுசுரணையற்ற இலங்கையை விட்டு எங்கேயாவது ஓடி மறைக!

—கறுவாக்கேணி
கவிஞர் முத்துமாதவன்

## அளவெட்டி வடக்கு கூட்டணிக் கிளை

இக்கிளையின் புனரமைப்புக் கூட்டம் காங்கேசன்துறைப் பா.உ. அ. அமிர்தலிங்கம் அவர்களுடைய தலைமையில் நடை பெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. க. நாகலிங்கம், உபதலைவர் திரு. ச. இராசையா, செயலாளர் நா. பாலசுப்பிரமணியம், உதவி செயலாளர் சி. தவராசா, பொருளாளர் சி. உமைகுமாரன், செயற்குழு பொ. அருணாசலம், இ. நாகராசா, து. காசிப்பிள்ளை, வை. செல்லையா, வ. விஸ்வலிங்கம், ச. அமிர்தலிங்கம், கணக்குப் பரிசோதகர்! வ.க. செல்லத்துரை

### அளவெட்டி தெற்கு கூட்டணிக் கிளை

தலைவர் திரு மு. திருநாவுக்கரசு உபதலைவர் திரு க. கந்தையா, உதவிசெயலாளர் இ. குகேந்திரன், பொருளாளர் அ. சிவானந்தன் செயற்குழு க. அருளப்பு, பி. துரைராசா, லோ. மரியநாயகம், செ. சிவயோகம், சு ஞானசேகரம் க. காசிராசா, கணக்குப் பரிசோதகர்! திரு தி. சுப்பிரமணியம்,

## குமரி அனந்தன் ஈழம் வருகிறார்!

தமிழ்நாடு ஜனதாக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் பெருந்தலைவர் காமராசரின் பிரதம சீடருமான திரு. குமரி அனந்தன் எம். பி. அவர்கள் மிக விரைவில் ஈழம் வரவிருப்பதாக உலகத்தமிழ் பண்பாட்டியக்கத்தின் நிறுவனர் திரு. குரும்பசிட்டி இரா.கனகரத்தினத்துக்கு அறிவித்துள்ளார். ஈழத்து தமிழ் அன்பர்களோடு உரையாடி மகிழவும்' அவர்களது பிரச்சினைகளை நேரடியாக தெரிந்து கொள்ளவும், இலக்கிய பரிமாற்றம் நிகழ்த்தவும், தமது இந்தவருகைபயன்படுமென்றும், இலங்கைத் தமிழர்களுடன் உறவு அமைத்துக் கொள்வதற்கு தம்மனம் அவாவுறுவதாகவும் திரு. குமரி அனந்தன் மேலும் திரு. கனகரத்தினத்துக்கு எழுதியுள்ளகடிதத்தில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவிடுதலைப்போரின் ஈட்டிமுனைகளாக தமிழ்கத்தோலிக்கர்களே முன்நிற்கின்றனர்!

## வாகரை வாணனுக்கு அன்பான வேண்டுகோள்

தாங்கள் "கரைவையூர்ச் செல்வத்திற்கு ஒரு பதில்" என்ற போர்வையில் 30-4-78 சுதந்திரன் பத்திரிகையில் வெளியிட்டுள்ள அறிக்கைகள் எந்தவொரு கத்தோலிக்கனை மாத்திரமல்லாது ஒவ்வொரு தமிழ் மகனையும் புண்படுத்துவதாய் அமைந்துள்ளது.

தமிழ்ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக்காக தமிழ் மகன் ஒவ்வொருவனும் சாதி, சமய வேறுபாடுகளை அகற்றி முழுமூச்சாகப் பாடுபடவேண்டிய இவ்வேளையில் தாங்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களை கத்தோலிக்க மக்கள் மாத்திரமல்ல பெரும்பான்மையான இந்துசமய மக்களே விரும்பமாட்டார்கள் என்பதே எனது அபிப்பிராயமாகும்,

இந்து மதத்திற்கும் தமிழ்மொழிக்குமுள்ள தொடர்பு எவ்வளவு நெருக்கமானதோ அவ்வாறே தமிழ்மொழிக்குக் கத்தோலிக்கம் செய்த சேவைகள் பிரிக்கமுடியாதவையாகும். ஒருவன் இந்துவாகவோ, கிறிஸ்தவனாகவோ, தமிழனாகவோ அல்லது சிங்களவனாகவோ பிறப்பது அவனவனது குடும்பப் பிறப்பின் பயனே. ஆனால் அவன் எச்சமயத்தைச்சார்ந்தோனாக இருந்தாலும் தம் சமயநெறிப்படி வாழவேண்டும்; எவ்வினத்தைச் சார்ந்தோனாக இருந்தாலும் மனிதாபிமானத்தோடு நடக்கப் பழகிக்கொள்ளவேண்டும். இக்கோட்பாடுகளை மதிக்கத் தவறும்போதுதான் மனிதன் வெறிகொண்டவனாகின்றான்; இவ்வெறித்தன்மை ஏற்பட்டதினால் உண்டான விளைவை சமீபத்திய இனக்கலவரத்தின்போது யாம் கண்டோம்.

தமிழக் கத்தோலிக்கர்கள் உள்ளங்களில் இனமொழி உணர்வுத் தீமூளவேண்டும் அல்லது மூட்டப்படவேண்டும் என்று கேட்டுள்ளீர். இவ்வார்த்தை நகைப்புக்கிடமானது. இன்று தமிழ்ஈழ விடுதலைக்காக தம்மையே அர்ப்பணிக்க காத்திருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ்க் கத்தோலிக்கர்களை இது புண்படுத்துவதாகும். மற்றைய சமயங்களைச் சேர்ந்த சகல தமிழ் மக்களது உள்ளங்களிலும் இத்தீ பரவியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

எத்தனையோ இந்து மதத்தைச் சார்ந்த மக்களிடம் இனமொழி உணர்வுத் தீயை மூட்டிய பெருமை கத்தோலிக்க மக்களைச் சார்ந்ததாகும், இதைத் தமிழ்மக்கள் பலரும் அறிவர். நடந்து முடிந்த தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மன்னாரில் வாக்குச் சேகரிக்கும் முகமாக தமிழ்க் கத்தோலிக்க குருமார் தாம் கழுத்தில் அணியும் சிலுவை மீது சத்தியம் வாங்கி வாக்குச் சேகரித்தார்கள் என அமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்தில் உளறியதை வாகரை வாணன் அறியமாட்டாரா? இவ்விடயம் உண்மையாக இருக்கலாம். ஒருவேளை பொய்யாகவும் இருக்கலாம், ஆனால் இனமொழி உணர்வு குறைந்த மக்களுக்கு இனமொழி உணர்வுத் தீயினால் மூளப்பட்ட எத்தனையோ கத்தோலிக்கர் இன உணர்வுத் தீயைமூட்டிவிட்டாகள் என்பதை உம்மால் மறுக்கமுடியுமா? உம்முடைய வாசகங்கள் இவ்வாறான கத்தோலிக்கரின் மனதைப் புண்படுத்தாதா?

கரவையூர் செல்வத்திற்கு ஒரு பதில் எனக் கூறிவிட்டு அவருக்கு நேரிடையாகப் பதிலளிக்காது அவர் சார்ந்திருக்கும் சமயத்தையல்லவா சாடியுள்ளீர். மட்டக்களப்பு, திருகோணமலை, கற்குடாவில் ஒரு மிகச் சில கத்தோலிக்க குருமார் ஐ.தே.கட்சியின் வெற்றிக்காக உழைத்தார்கள் என்பதற்காக (எவ்வளவு தூரத்திற்கு உண்மையோ நானறியேன்) வடக்கு கிழக்கு மாகாணமெங்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியின வெற்றுக்காக அல்லும் பகலும் உழைத்த எத்தனையோ குருமாரின் முகத்தில் அல்லவா கரியைப்பூச முயன்றுள்ளீர். தந்தை செல்வாவைத் தமிழினத் தேசிய இனத்தின் தலைவனாக ஏற்றுக்கொண்ட தமிழினத்தின் மத்தியில் உமது வாசகங்கள் எடுபடாதென்பது தெளிவானதாகும்.

கடைசியாக, எந்தவொரு சாதியையோ, சமயத்தவரையோ புண்படுத்தும் வாகரைவாணன் போன்றோரின் கட்டுரைகளை தமிழின விடுதலைக்காகப் பாடுபடும் ஒரு விடுதலைப்பத்திரிகையில் இனிமேலும் பிரசுரிக்காதிருக்குமாறு சுதந்திரன் ஆசிரியரிடம் தாழ்மையாக வேண்டுகிறேன்,

வளர்க தமிழ் மக்கள் ஒற்றுமை.

**ச. மனோகரன் மரியதாஸ்**

ஜெனிபர் பெர்னாண்டோ என்ற ஓர் கத்தோலிக்க தமிழ் அன்பர் வண. கரவையூர் செல்வத்தின் சில கருத்துக்களையொட்டி எழுப்பிய சந்தேகங்களையும் அதற்கு வண. கரவையூர்ச்செல்வம் அளித்த பதிலையும் சுதந்திரனில் பிரசுரித்திருந்தோம். அதன்பின் கவிஞர் வாகரைவாணன் என்ற கத்தோலிக்க தமிழ் அன்பர் கரவையூர் செல்வத்தின் பதில் பற்றி சில ஆசங்கைகளை கிளப்பியிருந்த கட்டுரையையும் பிரசுரித்திருந்தோம். கவிஞர் வாகரை வாணனுக்கு பதிலளித்து எழுதப்பட்ட ஒரு கட்டுரையை இங்கு தருகிறோம். கருத்துமோதல் என்ற அளவில் இவற்றை சுதந்திரனில் பிரசுரித்தோமே தவிர எந்த ஒரு மதத்தவரையும் புண்படுத்தும் நோக்கத்துடன் அல்ல என்பதையும் இங்கு உறுதிப்படுத்துகிறோம்,-ஆர்.

# 'நாம் விழிப்போடுதான் இருக்கிறோம்" எம்மை எவரும் விலைக்கு வாங்கமுடியாது

## முல்லைத்தீவு பா. உ. செல்லத்தம்பு வீரமுழக்கம்!

"தனித்தமிழ் ஈழநாட்டை நிறுவுவது எமது முடிந்த முடிபாகும். இதற்கு மக்களின் ஆணையையும் பெற்றிருக்கிறோம். அரசியலமைப்புத்திருத்தங்கள் கொண்டுவரப்படும் போது, எமது இயக்கத்தின் சக்தியை முழு அளவில் பிரயோகித்து எமது முடிந்த முடிபை, சிங்களவர்களுக்கும், உலக நாடுகளுக்கும் தெரிவிப்போம். நாம் என்றுமே விழிப்பாக இருக்கிறோம். எவரும் எம்மை விலைக்கு வாங்க முடியாது. உரிய சந்தர்ப்பம் வரும்போது நம்மைப் பற்றி உலகம் அறியும்"

—இவ்வாறு முல்லைத்தீவு த. வி. கூ. கிளை அமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய முல்லைத்தீவு பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்கள் குறிப்பிட்டார். திரு. செல்லத்தம்புவின் இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது!—

"கடந்தகால அரசாங்கத்தைப் போன்றே இன்றைய அரசாங்கமும் தமிழ்மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் அக்கறையின்றி இருந்து வருகிறது, இதனால் பாராளுமன்ற மட்டத்தில் எமது பாராளுமன்றக் குழுவினால் அநுகதிகம் சாதிக்க சந்தர்ப்பம் ஏற்படவில்லை. பாராளுமன்ற இயக்கத்தினால் மட்டும் எமது விடுதலையை வென்றெடுத்து விடமுடியாது. பாராளுமன்றத்துக்கு வெளியேயும் உரிய நேரம் வரும்போது இயக்கங்களை நடத்துவோம்.

அதற்கு முன்னோடியாக இப்போது தமிழ்ஈழம் அடங்கிலும் எமது இயக்கக்கிளைகளை நிறுவி வருகிறோம். எனவே தமிழ் பேசும் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் நாம் சோர்ந்து விட்டதாகவோ, திசைமாறிவிட்டதாகவோ வீண் அர்த்தம் செய்து மனம் குழம்பிடத் தேவையில்லை. நாம் சென்ற தேர்தலில் எதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்டோம் என்பது எம் எல்லோர் நெஞ்சிலும் நிறைவாக உள்ளது. நமது இன விடுதலையை பெறும் வழியை உரியகாலத்தில் உரிய முறையில் உலகம் அறிந்து கொள்ளும்.

அதேவேளை எமது தொகுதி அபிவிருத்திகளையும் நாம் கவனித்து வருகிறோம். நாம் எதிர்க்க வேண்டியவற்றை எதிர்க்கிறோம். ஆதரிக்ககூடியவற்றை ஆதரிக்கிறோம். நாம் எதிர்க்கட்சியிலிருக்கிறோம் என்பதற்காக எந்த ஒரு அமைச்சரோ, அதிகாரியோ எமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான பங்கினை மறுக்க முடியாது. அப்படி மறுத்தால் அதைத் தட்டிக்கேட்க மக்கள் எமக்கு அதிகாரம் அளித்துள்ளார்கள். அதன்படிதான், ஓர் அமைச்சுக்கு எதிராக உள்ள ஒரு சந்தேகத்தை கடந்தவாரம் பாராளுமன்றத்தில் வெளியிட்டிருந்தேன். அதன் பலனாக, கொழும்பிலிருந்து ஜனாதிபதியின் சார்பாக அவரது பிரதிநிதியொருவர் காரில் முல்லைத்தீவுக்குவந்து என்னைச்சந்தித்து எனது விளக்கத்தைப் பெற்றுச் சென்றார்.

நாம் மிகவும் விழிப்பாக இருக்கிறோம். எம்மை எவரும் விலை கொடுத்து வாங்கவோ அடிமைப்படுத்தவோ முடியாது.

செந்தமிழர் இயக்கம் பற்றி விளக்கம் கேட்டீர்கள். எவரும் எங்கும் நிற்கட்டும். நாம், நமது கொள்கை இலட்சியம், அதை அடையும் வழி பற்றி எல்லோருக்கும் விளக்கமளிக்கிறோம். விழிப்பாக இருக்கிறோம். ஆகவே ஊடுருவலுக்கோ, இடைச்செருகலுக்கோ, இடமளியோம்.

[illegible] தமிழர்களின் முடிந்த முடிவெனக்கூறி அவர்களின் முழுச் சம்மதத்தையும் பெற்றுவிட்டோம். செந்தமிழர் இயக்கமோ சுயநிர்ணய உரிமை என்ற அளவில் தான் நிற்கிறது. செந்தமிழர் இயக்கத்துடன் கூட்டணி உறவு வைத்துக்கொள்வதா இல்லையா என்பதை யிட்டு ஆராய்ந்து முடிவெடுக்க ஒரு குழுவுக்கு நடவடிக்கைக்குழு அதிகாரம் அளித்துள்ளது. எனவே நாம் இதுபற்றி கருத்துக்கூறுவது நியாயமானதல்ல; இதன்படி இக்குழு இனத்துக்கு எது நல்லதோ அந்த நல்ல முடிவை எடுக்கும் ஏமது தலைவர்கள் எந்தப்பிரச்சினையிலும் அவசரப்பட்டு முடிவு எடுக்கமாட்டார்கள்.

"நமது கிளையில் சிறுபான்மை சமூகப் பிரதிநிதிக்கும் நீங்கள் முக்கிய இடம் கொடுத்துள்ளது எனக்கும், எமது இயக்கத்துக்கும் மகிழ்வைத் தருவதாகும்; எமது சமுதாயத்திலுள்ள சாதி வேறுபாட்டை ஒழித்துக் கட்ட நாம்பாடு படுவோம்"

இக்கூட்டத்தில் திரு. ம. சூ. வஸ்தியாம்பிள்ளை, திரு. மார்க்கு பிள்ளை திரு வல்லிபுரம் ஆகியோரும் பேசினர்.

### முல்லைத்தீவு கிளை நிர்வாகிகள்

தலைவர் அ. வெ. அந்தோனிப்பிள்ளை, உபதலைவர்



சி. உ. தனபாலசிங்கம்; செயலாளர் திரு. வே. முருகேசு, உபசெயலாளர்: நா. மருசலின், பொருளாளர்: ஞா. செபமாலை எட்டுப்பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. தொகுதிக்கிளையின் மூன்றுவது பிரதிநிதியாக சிகை அலங்காரத் தொழிலாளி ச. யோ. அந்தோனிப்பிள்ளையும் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### புத்துவெட்டுவான் கிளை

முல்லைத்தீவுத்தொகுதியில் உள்ள புத்துவெட்டுவான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளை நிர்வாகிகள் பின்வருமாறு: தலைவர்: திரு. ச. துரைசிங்கம் அவர்கள். உபதலைவர்: மு. கணபதிப்பிள்ளை. செயலாளர்: சு. தனபாலசிங்கம். பொருளாளர்: க. தவகணநாதன்; இக் கூட்டத்தில் நிர்வாக உறுப்பினராக மேலும் ஆறுபேர் தெரிவாகினர். அத்துடன் தொகுதிக் கிளையின் மூன்றும் உறுப்பினராக சிறுபான்மை தமிழரை சேர்ந்த திரு. முருகன்—மாணிக்கம்

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் திருக்குறள் மாநாடு

## 'தென்மொழி' பெருஞ்சித்திரனர் பங்கேற்கிறார்!

## மாநாட்டை தமிழ்ஈழ முதல்வர் அமிர்தலிங்கம் தொடக்கிவைக்கிறார்!

### மூன்று நாட்கள் நடைபெறும் முத்தான நிகழ்ச்சிகள்

தமிழ்மறைக் கழகத்தின் பதினெட்டாவது திருக்குறள் மாநாடு மிகவும் கோலாகலமான முறையில் புங்குடுதீவில் இம்மாதம் 20, 21, 22 திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த மூன்று நாள் மாநாட்டை தமிழ்ஈழ முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆரம்பித்துவைக்கிறார். மாநாட்டில் தமிழ் நாட்டறிஞர் தென்மொழி பெருஞ்சித்திரனர் சிறப்புப் பேருரைகள் நிகழ்த்துகிறார்.

புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் ஆதரவில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் திருவள்ளுவர் அரங்கில் மாநாடு நடைபெறவுள்ளது. மாநாட்டுநிகழ்ச்சிகளை தமிழ்மறைக் கழகச் செயலாளர் திரு. தில்லைச்சிவனும்,புங்குடுதீவு இளைஞர் கழக செயலாளர் திரு. க. திருநாவுக்கரசுவும் வெளியிட்டுள்ளனர். அதன்படி, நிகழ்ச்சிகள் வருமாறு:-

### 20.5 78 சனிக்கிழமை

தலைவர்: உயர்திரு. கா. பொ. இரத்தினம், பா. உ. அவர்கள் (தலைவர் தமிழ் மறைக் கழகம்)

பி. ப. 4-00 மணி: திருக்குறள் ஏட்டுச் சுவடி ஊர்வலம் (புங்குடுதீவு இளைஞர் கழக மண்டபத்திலிருந்து).

கடவுள் வாழ்த்து: புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவிகள்.

வரவேற்புரை திரு: க. திருநாவுக்கரசு அவர்கள் (செயலாளர், இளைஞர் கழகம்).

தொடக்கவுரை: உயர்திரு அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்கள் (எதிர்க்கட்சி முதல்வர்).

தலைமையுரை: தலைவர் அவர்கள்.

விரிவுரை: "வள்ளுவர் கண்ட பொதுமையும் புதுமையும்" (வித்துவான், சி. ஆறுமுகம் அவர்கள்.

"வள்ளுவர் தோற்றமும் சமுதாயமாற்றமும்" திரு. ஆ. சிவநேயச்செல்வன் அவர்கள் (துணை நூலகர், யாழ் வளாகம்)

"திருவள்ளுவர் கண்ட சுமைகள்" பண்டிதர். க. மயில்வாகனம் அவர்கள்.

"வள்ளுவர் வழி" பண்டிதர். யேசுசபை யோசேப் மேரி அடிகள்.

"வள்ளுவர் கருத்தும் இன்றைய யுகமும்" திரு. சி. சடாட்சர சண்முகதாஸ் அவர்கள் (உதவி அரசாங்க அதிபர்)

#### திருக்குறள் மாநாட்டுச் சிறப்புமலர் வெளியிடுதல்

உயர்திரு. அ. அமிர்தலிங்கம், பா. உ, அவர்கள்

பிரதி பெறுபவர்: திரு. வி. இராமநாதன் அவர்கள் (உரிமையாளர் சீ து வை ஆலை)

சிறப்புரை: புலவர் பெருஞ்சித்திரனர் அவர்கள் (தென்மொழி ஆசிரியர் சென்னை.)

நாட்டுக்கூத்து: "வீமன் அனுமன் போர்" (வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திச்சபை)

### 21.5.78 ஞாயிற்றுக் கிழமை

தலைவர்: திரு. ஆ. செந்தில்வடிவேல் அவர்கள் (உதவி அரசாங்க அதிபர், நெடுந்தீவு)

காலை 10-00 மணி தலைமை உரை, மாணவர் பேச்சுப் போட்டி.

பரிசில் வழங்கல்: திரு.செ. ப. சிவராசா அவர்கள்

பி. ப. 3-00 மணி: வழக்குரை மன்றம் "திருக்குறள் சமய நூல்" நடுவர்; திரு. கோவை மகேசன் ஆசிரியர், சுதந்திரன். சார்பணி பண்டிதர். பொன்.கணேசன் அவர்கள் (வட்டாரக்கல்வி உத்தியோகத்தர்) புலவர் க. சிவானந்தன் அவர்கள் திரு. ஈழவேந்தன் அவர்கள்

எதிரணி பண்டிதர். க. குகதாசன் அவர்கள் (வட்டாரக் கல்வி உத்தியோகத்தர்) புலவர் நா. சிவபாதசுந்தரன் அவர்கள் வித்துவான் க. சொக்கலிங்கம் அவர்கள்

தலைவர்: கலாநிதி.சு. வித்தியானந்தன் அவர்கள் (தலைவர் யாழ் வளாகம்)

பி ப 6-00 மணி, தலைமையுரை

விரிவுரைகள்: "வல்லாரார் வள்ளுவரல்லால்" ஸ்ரீ நா, சுப்பிரமணிய ஐயர் அவர்கள் (விரிவுரையாளர், யாழ் வளாகம்)

"வள்ளுவரும் இளங்கோவும்" திரு வை. சுவாமிநாதன் அவர்கள் (தொழில் அதிகாரி யாழ்ப்பாணம்)

"வள்ளுவர் காலமும் கருத்தும்" திரு சி மௌனகுரு அவர்கள்

"வள்ளுவரும் பொது உடைமையும்" திரு வ பொன்னம்பலம் அவர்கள் (செயலாளர் செந்தமிழர் இயக்கம்)

சிறப்புரை: புலவர் பெருஞ்சித்திரனர் அவர்கள் (தென்மொழி ஆசிரியர் சென்னை)

கலை நிகழ்ச்சிகள்; பாடசாலை மாணவர்கள்

வில்லுப்பாட்டு: "வள்ளுவரும் வாசுகியும்" திருப்பூங்குடி, வி க ஆறுமுகம் குழுவினர்.

### 22.5 78 திங்கட்கிழமை

மு. ப, 10-00 மணி, மாதர் அரங்கு

தலைவர்; திருமதி சித்திரலேகா மௌனகுரு அவர்கள் (விரிவுரையாளர் யாழ் வளாகம்)

தலைமையுரை: தலைவர்

விரிவுரைகள்: "ஊழிற் பெருவலியாவுள..." செல்வி அம்பிகா கந்தையா (ஆசிரியை வேலணை ம. ம. வி.)

"வள்ளுவர் கண்ட இல்லறம்" செல்வி புஷ்பா செல்வநாயகம் அவர்கள்

"குறள் காட்டும் நயமும் சுவையும்" திருமதி கமலா சனி சிவபாதம் அவர்கள்

"வள்ளுவர் காட்டும் பெண்மை" திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்

பி. ப. 3-00 மணி, கவியரங்கு: பொருள் "நான் கண்ட வள்ளுவன்"

தலைவர்: உணர்ச்சிக் கவிஞர், காசி ஆனந்தன் அவர்கள்

கவிஞர்கள்: திருவாளர்கள் சி க நாகலிங்கம், திரு நா க. நண்முகநாதபிள்ளை, இளங்கோவேந்தனார், ம. பார்வதிநாதசிவம், வே இராசலிங்கம், காரை சுந்தரம்பிள்ளை, ஸ்ரீ நா வீரமணி ஐயர் அவர்கள்

பி.ப, 4-30 மணி: "மேன்முறையீட்டு மன்றம்", வழக்குரை மன்றத்தின் தீர்ப்புக்கு மேன்முறையீடு

நடுவர்: கலாநிதி. அ சண்முகதாஸ் அவர்கள்

சார்பணி: திரு எஸ் கே மகேந்திரன் (சட்டத்தரணி)

எதிரணி: திரு எஸ் கே மனோகரன் (சட்டத்தரணி)

தலைவர்: உயர்திரு தி மாணிக்கவாசகர் அவர்கள்

பி.ப, 6-00 மணி: தலைமையுரை

விரிவுரைகள்: "ஈரடிக் காவியம்" திரு பி எஸ் சூசைதாசன் பா உ மன்னார்

"திருக்குறள் அன்றும் இன்றும்" திரு வே இ பாக்கியநாதன் அவர்கள் (யாழ் தொழில் நுட்பக் கல்லூரி)

"தமிழர் பண்பாட்டுவளர்ச்சியில் திருக்குறளின் பங்களிப்பு" திரு. துரைமனோகரன் அவர்கள் (துணை விரிவுரையாளர் யாழ் வளாகம்)

சிறப்புரை: புலவர் பெருஞ்சித்திரனர் அவர்கள்

இசையரங்கு: பொன் சுந்தரலிங்கம் குழுவினர் திரு தி சிவசாமி செயலாளர், தமிழ் மறைக் கழகம்

---

## நாம் விழிப்...

—3-ம் பக்கத்தொடர்

ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

### கொக்கிளாய் கிளை

கொக்கிளாய் பகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி கிளை 7-5-78ல் ஆரம்பிக்கப் பட்டது. இதன் நிர்வாகிகள் பின் வருமாறு: தலைவர்: திரு. கோ. செல்லையா. உபதலைவர்: யோ.பி. செல்வநாயகம். செயலாளர்: க. கணேசலிங்கம். உபசெயலாளர்: ஆ. தங்கத்துரை. பொருளாளர்: மோ. திருச்செல்வம்.

### துணுக்காய் கிளை

துணுக்காயில் தமிழர் விடுதலைக் கூட்டணிகிளை 6-5-78ல் அமைக்கப்பட்டது. இதன் தலைவர்: ஆ. குலசேகரம். உபதலைவர்: ஆ. நடராசா. செயலாளர்: வ. கமலேஸ்வரன், உபசெயலாளர்: து. செல்வராசா. பொருளாளர்: வ. அம்பலவாணர். நிர்வாக உறுப்பினராக 15 அங்கத்தவர்கள் தெரிவாகினர். அத்துடன் தொகுதிக் கிளையின் 3ம் உறுப்பினராக சிறுபான்மை தமிழரான திரு. இ. கந்தசாமி தெரிவானார்.

### இளைஞர் பேரவை

7-5-78 ஞாயிறு காலை 11 மணி அளவில் முல்லைத்தீவு தேசிய அரசப் பேரவை உறுப்பினர் திரு.எக்ஸ்.எம். செல்லத்தம்பு அவர்களின் இல்லத்தில் இளைஞர் பேரவையின் மூலக் கிளை அங்குரார்ப்பண கூட்டம் தலைவர் மாவை சேனாதிராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் தொகுதியின் மூலக்கிளைக்கு இவரும்' பரவலான கிளைகளுக்கு ஒவ்வொரு தலைவர் என்ற முறையிலும்தெரிவு செய்யப்பட்டனர். முல்லைத்தீவு தொகுதியின் பலபாகங்களிலும் இருந்து உத்தரவுள்ள நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் பங்கு கொண்டனர். இக் கூட்டத்திற்கு விசேட பேச்சாளராக திரு, எக்ஸ். எம். செல்லத்தம்புவும், சிறை மீண்ட இளைஞர் சந்தியாரும், மாவை. சேனாதிராசாவும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். இளைஞர்களின் — சந்தேகங்கள், கேள்விகள் யாவற்றுக்கும் மாவை சேனாதிராசாவும். திரு. எக்ஸ்.எம். செல்லத்தம்புவும் விளக்கம் அளித்தார்கள். இளைஞர் பேரவையின் புதிய அமைப்பு விதிகள், வளர்ச்சிமுறைகள் எல்லோராலும் ஏகமனதாக ஏற்கப்பட்டன. அத்துடன்கூட்டத்தில் எஸ். பசுவதி, எம். கணேசமூர்த்தி, எஸ். எம். தெய்வேந்திரம், எம். கே. தவராசா, குணம், ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

—தகவல்: முல்லை செந்தில்—

---

## திருமலையில் தமிழ்க் கொலை!

தமிழ்ஈழத்தின் தலைநகராக விளங்கப்போகும் "திருகோணமலை நகரத்தில்" உள்ள சகல அரசாங்க அலுவலகங்களிலும்; பிரதான பொது இடங்களிலும் "தமிழ்கொலை" நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் மட்டுமல்லாது திருகோணமலை (பஸ்) பேருந்து நிலையத்திலும்; பேருந்து பெயர் பலகைகளிலும் இவை நிகழ்கின்றது. பேருந்துப் பெயர் பலகையில் சிங்கள மொழி மேலே பெரிய எழுத்துக்களில் நின்று தமிழைக் கொலை செய்வதுடன் நில்லாது ஏறி நின்று மிதிக்கின்றது. இது தகுமா? முறையா? என்று தமிழ் இளைஞர்கள் [illegible] கின்றனர்.

---

## உபதேசம் உனக்கல்ல— ஊருக்குத்தான்!

தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றும் பொலீசாருக்கு தற்காப்புக்காக எந்நேரமும் ஆயுதங்கள் எடுத்துச்செல்ல வசதி செய்யப்படும் என அறியவருகிறது.

—தினபதி (8-5-78)

ஹாவன்னா நகரில் மே 15ம் திகதி நடைபெறும் கூட்டுச்சேரா நாடுகளின் இணைப்புக் கூட்டத்தில் ஆயுதப்பரிகரணக் கொள்கையை இலங்கை வற்புறுத்த விருக்கிறது.

—டெயிலி நியூஸ் (10-5-78)

---

—1-ம் பக்கத் தொடர்

யிலும் சட்டவிரோதமாகவும் குரூரமாகத் தாக்கப்படுவது பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International)யின் உடனடிக் கவனத்துக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க முருங்கன் கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணையின் பொருட்டு. உமா மகேஸ்வரன். வாமதேவன், பத்மநாதன். நாகராசா ஆகிய நான்கு தமிழ் இளைஞர்கள் தேடப்பட்டு வருவதாகவும், இவர்களைப்பற்றிய தகவல் கொடுப்போர்க்கு ரூபா ஒரு இலட்சம் சன்மானம் வழங்கப்படுமென்றும் சி. ஐ. டி. தலைமை நிலையம் 13-5-78ல் ஓர் அறிவித்தலை மேற் குறித்த நால்வரின் புகைப்படங்களுடன் வெளியிட்டுள்ளது.

---

'மில்க்வைற் சலவைப்பவுடர்'

துரித சலவைக்கு "மில்க்வைற்" சலவைப்பவுடர் வாங்கி உபயோகியுங்கள். யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் அதன் சகல கிளைகளிலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற் யாழ்ப்பாணம்

---

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு, வெளியிடப்பட்டது! அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம்; பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org